ஆரணி-பாலவாக்கம் சாலேயில் பாலம்

*** 589 வின—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை. யளிப்பாரா—

பொன்னேரி வட்டம், ஆரணியையும் பாலவாக்கம் கிராமத்தையும் இணைக்க ஆரணியாற்றின் குறுக்கே தரைப்பாலம் Road Dam அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லே.

திரு. கா. வேழவேந்தன் : நம்முடைய அரசு ஏற்பட்ட பிறகு ஆரணியாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டி அந்த அணை இருக்கும் கிராமங்களுக்குப் பக்கத்தில் தண்ணீர் தேங்குகிறது. ஆகவே, பல ஊர்களே இணைக்கின்ற இந்தப் பாலத்தை அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட தொகையில் 33 லட்சம் ரூபாய்தான் இன்னும் பாக்கி இருக்கிறது. ஏற்கெனவே நிதி ஒதுக்கப்பட்ட திட்டங்கள் இருக்கும் காரணத்தால் இப்போது இதனை ஏற்றுக் கொள்ள சாத்தியமில்லே.

தென்னர்க்காடு மாவட்டத்தில் புதிய பாலங்கள்

*** 590 வின—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடை யளிப்பாரா—

தியாகதுருகம் அருகே ஓடும் மணிமுத்தாறு நதி குறுக்கே ஒரு மேம்பாலமும், அசகுளத்தூர் அருகே ஓடும் மயூரா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும், ஈருடையான்பட்டி அருகே ஓடும் முசகுந்தா நதியின் குறுக்கே ஒரு மேம்பாலமும் கட்டும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இல்லே.

திரு. ந. தருமலிங்கம் : தென்னுற்காடு மாவட்டத்தில் ரிஷிவந்தியம் தொகுதி பின்தங்கிய தொகுதி. அது காடுகளும் ஆறுகளும் நிறைந்த பகுதி. ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு